# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.
## CC-209/2022
## Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.காளிராணி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present.)
05.03.2026 – 01.10 PM
முதல் விசாரணை:–

1. நான் சாயல்குடியில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது கணவர். பட்டியல் சாட்சிகள்3 ஐ எனக்கு தெரியும்.

2. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எனது வீட்டின் முன்பு யாரோ 4, 5 நபர்கள் அசிங்கமாக பேசிக்கொண்டு இருந்தார்கள். அந்த சமயத்தில் எனது கணவர் வீட்டில் இல்லை. எனது கணவர் வந்த உடன் அவரிடம் விவரங்களை கூறி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தோம். போலீசார் விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:–

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**

கடந்த 17.03.2020ம் தேதி மாலை 07.00 மணியளவில் எனது கணவர் வீட்டில் இல்லாத நேரத்தில் என்னுடைய வீட்டின் முன்னால் என்னை பார்த்து ஆஜர் எதிரிகள் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தது சம்மந்தமாக எனது கணவர் சாயல்குடி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள்

என்பதால் எதிரிகளுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:46:03 +0530